ஃபிஜி



# வலியின் மத்தியில் அழைப்பு

*ஆனாலும் ஏதோ ஒன்று அவருக்கு அருகாமையிலேயே என்னை இழுத்துக்கொண்டிருந்தது*

என் பெயர் மிலோ; தென் பசிஃபிக் பெருங்கடலில் உள்ள சமோவ் என்கிற அழகான தீவில் பிறந்து வளர்ந்தேன். வளர்ந்த காலக்கட்டங்கள் எளிதாக இல்லை. எங்கள் குடும்பத்தில் அன்பைவிட வேதனைதான் அதிகம் காணப்பட்டது. என் அப்பா குடிகாரர், பல சமயங்களில் சிறுசிறு பிரச்சினைகள்கூட பெரும்பாலும் சண்டையில்தான் முடிவடையும். சிறுசிறு விஷயங்களுக்கெல்லாம் என் அம்மாவை அடிப்பார். நானும் என்னுடன் பிறந்தவர்களும் பெரும்பாலும் பயத்திலும், குழப்பத்திலும்தான் நாட்களைக் கழித்தோம். அது கடினமாக இருந்தது மட்டுமல்ல, என் உள்ளமும் உடைந்திருந்தது.

நான் பெரியவனான பிறகு, தேவனிடம் பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தேன். "எனக்கு என்ன எதிர்காலம் இருக்கிறது? என் வாழ்க்கைக்கு ஏதாவது நோக்கம் இருக்கிறதா?" என்றெல்லாம் கேட்டேன். தேவன் சொல்வதைக் கேட்கவும், அவருக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாகவும் இருப்பதாகச் சொன்னேன். ஜெபித்தேன், அழுதேன், பதில்களுக்காக வேண்டினேன். ஆனால் தேவன் அமைதியாகவே இருப்பதுபோல உணர்ந்தேன். எனக்கு கோபம் வந்தது, என் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒவ்வொன்றுக்காகவும் தேவனைக் குறைசொன்னேன்.

ஆனாலும் ஏதோ ஒன்று அவருக்கு அருகாமையிலேயே என்னை இழுத்துக்கொண்டிருந்தது. புதன்கிழமைகளில் வேத ஆராய்ச்சி வகுப்புகளில் கலந்துகொள்வேன்,

ஓய்வுநாட்களில் ஆலயத்திற்குச் செல்வேன். இந்த அனுபவங்களில் எல்லாம் என் அம்மாதான் எனக்கு மிகப்பெரிய ஆதரவாக இருந்தார். அவருக்கு பல வேதனைகள் இருந்த போதிலும்கூட, மனஉறுதியுடன் காணப்பட்டார், சரியானதைச் செய் வதற்கு என்னை ஊக்கப்படுத்தி னார். நான் சிறுவனாக இருந்த சம யத்தில் முகாம்களுக்கு அல்லது சபை நிகழ்ச்சிகளுக்கு என்னை அனுப்பிவைக்கமாட்டார். ஆனால் இப்போது எதிர்பாராத ஒன்று நடந் தது.

சமோவில் 2024ம் ஆண்டு வாலிபர் கான்ஃபரன்ஸ் நடைபெறு வதாகக் கேள்விப்பட்டபோது, என் னிடம், “நீ செல்லவேண்டும்” என்று சொன்னார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தக் கூட்டம் என்னு டைய வாழ்க்கையில் மாற்றத்தை உண்டுபண்ணும், என்னை சிறந்த நபராக மாற்றும் என்று சொன்னார். அவரது வார்த்தைகள் என் இருதயத் தைத் தொட்டன; அவர்மீது எனக் கிருந்த அதிக மரியாதையின் நிமித் தம் அதில் சேருவதற்கு விண்ணப் பித்தேன்.

அந்தக் கூட்டம் ஆரம்பிப்ப தற்குமுன் மீண்டுமாக ஜெபித்தேன். இந்த முறை, தேவனிடம் எனக்கு ஓர் அடையாளத்தைக் காட்டும்படி கேட்டேன். அவர் உண்மையிலே யே என்னை அழைக்கிறாரா என்று தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன். ஒரு வகுப்பு வேளையின்போது பாடம் நடத்துபவர், ஒரு வருட ஊழியசேவை செய்ய யாராவது முன்வருகிறீர்களா என்று கேட்டார். அந்தச் சமயத்தில் எனக்குள்ளாக ஒரு பலத்த தூண்டுதல் உண்டானது. தேவனே எனக்குள்ளாக கிரியை செய்ததை உணர்ந்தேன். இறுதியாக அவர் என்னிடம் பேச ஆரம்பித் தார். அந்த ஊழியப்பணியில் சேர விண்ணப்பித்தேன். தேவன் அமை தியாக இருந்த வருடங்கள் முழுவ தும் அவர் என்னைப் புறக்கணிக்க வில்லை என்பது புரிந்தது. தேவன் என்னை ஆயத்தப்படுத்தி வந்திருக் கிறார்.

எல்லாம் கைகூடி வருவது போலத் தோன்றிய சமயத்தில், மிகப் பெரிய இழப்பு நேர்ந்தது. ஊழியப் பயிற்சிக்காக ஃபுல்டன் கல்லூரிக் குப் புறப்படவிருந்த சமயத்தில், என்னுடைய சகோதரன் மரித்துப் போனான். நாங்கள் இருவரும் 16 வருடங்கள் சேர்ந்தே வளர்ந்தோம், திடீரென மரித்துப்போனான். கத்தி யால் என் இருதயத்தைக் குத்தினது போல இருந்தது. என் உள்ளம் உடைந்துபோனது. நம்பிக்கையை இழந்தேன். அவனை என்னால் காப் பாற்ற இயலாதததுபோல உணர்ந் தேன். முற்றிலும் பயனற்றவனாக உணர்ந்தேன்.

அப்போது என் அம்மா மீண் டும் என்னிடம் வந்தார். அவரே வேதனையில் இருந்தாலும்கூட, தேவன் என் வாழ்க்கையில் வைத் திருந்த அழைப்புகுறித்து மீண்டும் ஞாபகப்படுத்தினார். அவரது வார்த் தைகள் என்னை மீண்டும் பெலப் படுத்தின. பரிசுத்த ஆவியானவர் எனக்குள்ளாகக் கிரியைசெய்ததை யும், என்னைவழிநடத்தியதையும், என்னை நான் சுமக்கமுடியாத நேரங்

களில் என்னைத் தூக்கி சுமந்ததை யும் உணர்ந்தேன்.

இப்போது, வேதனையிலும் நம்பிக்கையற்ற நிலையிலும் இருப் பவர்களைப் பார்க்கும்போது அவர் களிடம் என் சாட்சியைப் பகிர்ந்து கொள்ள ஆவலாக இருக்கிறேன். யாரும் நம்பிக்கையை இழக்கவே கூடாது. நீங்கள் நம்பிக்கையில்லா மல் போகவும், மனமுடையவும், இரட்சிப்பை இழக்கவும் சத்துரு விரும்புகிறான். ஆனால் தேவன் உங்களை மிகப்பெரிய ஒரு நோக் கத்திற்காக ஆயத்தம்பண்ணுகிறார். தொடர்ந்து ஜெபியுங்கள், விசுவாச மாயிருங்கள், தேவன் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் எதிர்பார்க்கிற நேரத்தில் தேவனுடைய அழைப்பு வராமல் இருக்கலாம், ஆனால் அவ ருடைய அழைப்பு வரும்போது அறிந்துகொள்வீர்கள். அதற்காக ஒருபோதும் மனம் வருந்தாமல் அவருக்குசம்மதம்தெரிவியுங்கள்.

இயேசு ஒருமுறை, 'நீதியினி மித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக் கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது' என்று சொன் னார். மத் 5:10. அந்த வாக்குறுதி யைப் பற்றிக்கொள்ளுங்கள். தேவன் தம் மக்களைப் பாதுகாக்கிறார்.

இந்தச் சம்பவத்தை மைகா டூய்மா விடம் சொன்னவர் மிலோ எதானி ஃபெவா ய்னி.

2013ம் ஆண்டு எடுக்கப்பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக்கை யின் ஒரு பகுதி, தென் பசிஃபிக் தீவு களில் 15,000 வேதாகமங்களும் பயிற்சிப்புத்தகங்களும் வழங்குவ தற்குப் பயன்பட்டது. அதனால் மிலோ போன்றவர்கள் இயேசுவைப் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. இந்தப் பதின்மூன்றாம் வாரக் காணிக் கையின் ஒரு பகுதி சாலமோன் தீவு களிலும் வனூவடூவிலும் சிறுவர் சுகாதார நிகழ்ச்சிகளைச் செயல் படுத்த உதவும்.

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் சமோவ் மற்றும் ஃபிஜியைக் காட்டுங்கள்.
- தென் பசிஃபிக் டிவிஷன் சம்பந்தமாகப் பார்ப்பதற்கு: bit.ly/spd-2026.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- ஃபிஜியின் தலைநகரம் சுவா; அதன் மக்கள் தொகை கிட்டத்தட்ட 2 லட்சம்.
- ஃபிஜியின் அதிகாரப்பூர்வ மொழிகள் ஆங்கிலம், ஃபிஜியன் மற்றும் ஃபிஜி ஹிந்தி.
- ஃபிஜியில் அதிகமாக இந்தியாவிலிருந்து குடியேறினவர்கள் இருக்கிறார்கள். இந்தியர்கள் பலர் அங்குள்ள கரும்புத்தோட்டங்களில் வேலைசெய்வதற்காக அங்கு சென்றார்கள்.
- ஃபிஜியின் மிகப்பெரிய தீவு விடா லெவு, அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் பாதியளவுக் கும் அதிகமாக இத்தீவின் நிலப்பரப்பாக உள்ளது.
- ஃபிஜியின் உறுதிமொழி 'ரெரேவாகா னா கலோவ் கா டோகா னா டுய்'. இதற்கு 'கடவுளுக்குப் பயப்படு, ராஜாவைக் கனம்பண்ணு' என்று அர்த்தம்.